

உ

சிவமயம்

# எனது பழைய சிந்தனைகள்

★

எழுதியவர்

**மு. மயில்வாகனம்**

★




5-10-1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவப் பெரியார் மு. மயில்வாகனம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்த்து

## வெண்பா

வேலணையூர் செய்தவத்தால் வேளாண் குடிவந்த
சாலப் பெரியமனத் தண்ணளியோன் - வேலவனார்
கோலமயில் வாகனப்பேர்க் கோமானும் வாழியவே
ஞாலமதி லென்றும் நயந்து.

நால்பத்து நல்லாண்டு நானிலத்தில் ஆசானாய்ச்
சீலப் பணிபுரிந்து சீர்த்திபெறும் - மேலோனாய்
எண்ணிறந்த மாணவரை ஏற்றமுறச் செய்தவுயர்
புண்ணியனும் வாழ்க பொலிந்து.

வையகம் உய்யவந்த மாகுரவ னாம்யோக
ஐயன் அடியிணையில் அன்புமிக்கோன் - செய்ய
திருத்தொண்டு செய்துயர்ந்த சீர்மயில் வாகனமாம்
திருத்தகையோன் வாழ்க சிறந்து.

## ஆசிரிய விருத்தம்.

சைவபரி பால னப்பேர்ச்
சபையதனிற் பலவா றாக
மெய்வருநல் லுள்ளத் தோடு
வியன்பணிகள் பலவே செய்தோன்
ஐயொருபத் தாண்டுவரை மாணவர்க்கே
யறிவுகொளீஇ யன்னார் தாமே
உய்யவழி செய்து வைத்த
உத்தமனும் பரம ஆசான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இந்தி யாவில்
ஏனையூர் தம்மி லுள்ள
நலங்கிளர் சொல்லின் வல்ல
நற்றமிழ்ப் பெரியோர் தம்மைக்
கலங்கரை விளக்குப் போலக்
கருத்துட னழைத்து வந்து
இலங்குபே ருரைக ளாற்றி
இன்புறச் செய்த ஏந்தல்.

சித்தாந்த வகுப்ப மைத்துச்
சிறப்புடன் நடாத்து வித்தோன்
பத்தியிற் புராணந் தம்மைப்
படனமாச் செய்து வந்தோன்
ஒத்தநன் மடால யங்கள்
ஓங்குசீர்ச் சிவால யங்கள்
அத்தனைக் காக வும்போர்
ஆடிக்காத் தளித்த அண்ணல்.

திருக்கேதீச் சரத்தி லுள்ள
சிவபிரா னுக்குத் தொண்டு
விருப்புடன் முந்திச் செய்தோன்
மிகுசிவ பூசை செய்வோன்
அருத்தியின் மேலாம் மாகேச்
சுரப்பூசை அன்பிற் செய்வோன்
உருத்திரன் அருளால் நாளும்
ஓங்கிநீ டூழி வாழ்க.

வித்துவான். க. கி. நடராஜன். B.O.L.

"யோக பவனம்",
பொன்னப்பா ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
29-9-80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புரை

பெரியார் மு. மயில்வாகனம் அவர்களை 1960-ம் ஆண்டு தொடக்கம் அறிந்திருக்கின்றேன். அவர் தேவையில்லாது கதைப்பதில்லை. ஆனால் கதைத்தாலோ, அது யோசிக்கக் கூடியதாயும் பிரயோசனமுள்ளதாயும் இருக்கும். அவர் எக்கருமத்தை எடுத்தாலும் கடவுள் தொண்டு என்றே செவ்வனே செய்வார்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

என்பதற்கமைய வாழ்கின்றவர் அவர். அவரது தூய்மையான மனதைப் பிரதிபலிக்கிறது இந்நூல். இந்நூலைப் படிக்கிறவர்கள், சைவ பரிபாலன சபையை முன்னின்று நடத்திய திரு. மயில்வாகனம் அவர்களின் நோக்கத்தையும், திண்மையையும், நேர்மையையும் உணர்ந்து கொள்ளுவார்கள்.

106, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
29-9-80

வைத்தியகலாநிதி
விஞ்ஞான கலாநிதி
பேராசிரியர் அ. சின்னத்தம்பி
L. M. S. (Ceylon)
F. R. C. S. (Edin.)
F. R. C. S. (England)
F. R. C. O. G. (Great Briton)
(Hon.) D. Sc. (Jaffna)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

எனது பழைய மாணாக்கர்கள் சிலரது விருப்பத்துக்கு இசைந்து கடந்த எண்பது ஆண்டுகளில் நான் அடைந்த அனுபவங்களைச் சுருக்கமாக எழுதியுள்ளேன். சூரியனின் முழுமையையும் ஒரு சிறு பனித்துளி காட்டுதல் போல, யாழ்ப்பாணத்தில் இருபதாம் நூற்றாண்டின் முதற் பாதிக்காலத்தில், சைவ சமூக வளர்ச்சிக்காக அயராது உழைத்த பல பெரியார்களைக் காட்டியுள்ளேன். அவர்களை அறிந்தவர்கள் மீட்டும் நினைவு கூர்வதற்கும், இளந்தலைமுறையினருக்கு அவர்களது வாழ்க்கை வழிகாட்டுவதற்கும், இந்நூல் பயன்படுமென எண்ணுகிறேன்.

மு. மயில்வாகனம்
இளைப்பாறிய ஆசிரியர்
சைவ பரிபாலன சபை நிருவாகசபை அங்கத்தவர்
இந்துக்கல்லூரி அதிகாரசபை அங்கத்தவர்

இல: 8, இரண்டாம் ஒழுங்கை,
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
29-9-80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jayanthi Celebrations Committee of

# Saiva Periar M. Mylvaganam

# JAFFNA

## N. Giridhari Prasad B A., B. L., P. P. A. (Dip)

Dear Sir,

It is with great delight and devotion that I write these few words of appreciation on the complexion of 80 years of fruitful life of Sri. M. Mylvaganam, in this Punya Bhoomi. I met Sri. M. Mylvaganam, the living savant, over a decade ago when he had invited me to preside over the Saiva Siddhanta Saba of Sri Lanka. Life becomes only meaningful when it is lived for a purpose with a sense of dedication. The purpose of all Human Life is to Serve and Love.

Sri. M. Mylvaganam began life as a teacher but the teaching transcended the frontiers of ordinary school education. He came into contact with the great Seer Shri Yogar Swami and this transformed Sri. Mylvaganam into a spiritual genius. He has served the cause of Hinduism in its different facets as the Secretary of the Saiva Paripalana Sabai and the able and efficient editor of the 'Hindu Sadanam' besides conducting periodical discourses by eminent scholars both from Ceylon and abroad. His selfless service continues unabated even to this day and I as a far Junior am not competent to bless him but I pray that he may de spared for many many years and may complete One Hundred Years of dedicated Life. My Prostrations to him and Prayers for long life, Health & Happiness.

"Gita House"
52, Devanga High School Road,
COIMBATORE - 641002.

*Camb* BANGALORE 17-9-1980.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பிறை கண்ட மயில்வாகனர்

( நா. முத்தையா - ஆத்மஜோதி )

கழுத்தில் உருத்திராக்கமாலை; உடம்பெல்லாம் வெண்ணீறு அணிந்த அழகு; மெலிந்த உடல். இப்படி ஒரு தோற்றம். இத்தகைய ஒரு தோற்றம் நமது மனக்கண்ணில் அப்பர் சுவாமிகளை நினைவூட்டுகின்றது. அப்பர் சுவாமிகள் 81 ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்தவர்கள். இன்று அத்தகைய ஒரு தோற்றத்தை ஊனக்கண்ணால் காணமுடிகின்றது. அவர்தான் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட உயர்திரு மயில்வாகனம் ஆசிரியர் அவர்கள். ஒக்ரோபர் 5-ம் திகதி அவர்களுடைய 80ஆவது பூர்த்தி விழாவை அவர்களுடைய பழைய மாணவர்களும் நண்பர்களும் சேர்ந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் வெகுகோலாகலமாகக் கொண்டாடுகின்றார்கள்.

இத்தகைய சிவத்தொண்டர்களை - சைவத்தொண்டர்களைக் கௌரவிக்க வேண்டியது சைவ நன்மக்களுடைய கடமையாகும். அவர்கள் பூதவுடலில் ஒளிவிடும் போதே கொண்டாடுவதால் அவர்களைப் பார்க்கும் இளைஞருக்கும் சமயப் பணியில் ஒரு உத்வேகம் உண்டாகும்.

1900-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 5-ம் திகதி வேலணையில் பிறந்து வளர்ந்த மயில்வாகனனாருக்கு அவரது ஐந்தாம் வயதில் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் திரு. செ. கனகசபாபதிப்பிள்ளை அவர்கள் ஏடு தொடக்கி வைத்தார்கள். இவரது ஆங்கிலக்கல்வி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரியிலே 1912-ஆம் ஆண்டு ஆரம்பமாயது. அப்பொழுது அதற்கு அதிபராக இருந்தவர் 'சிவராவ்' என்பவர் ஆவர். சீனிவாசராவ், நெவின்ஸ் செல்லத்துரை ஆதியோர் அதன்பின் அதிபர்களாக இருந்தனர். இன்னும் திரு. M. சபாரத்தினசிங்கி, M. ஆறுமுகம் B. A. C. மயில்வாகனம் ஆதியோரும் ஆசிரியர்களாக விளங்கினர்.

திரு. மயில்வாகனனார் கேம்பிறிஜ் சீனியர் அன்ட் லண்டன் மெற்றிக்குலேசன் சித்தி அடைந்தவுடன் மல்லாகம் ஆங்கிலக் கல்லூரியிலும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் ஆசிரியப் பணியை மேற்கொண்டார்.

அதன்பின் கொழும்பிலுள்ள ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார். யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதிலும் ஆசிரியப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட இருவரில் மயில்வாகனனார் ஒருவர் ஆவர். 1922, 23 ஆகிய இரு ஆண்டுகளும் பயிற்சிக் கலாசாலையில் கற்று ஆசிரியரானார்.

ஆசிரியர் பயிற்சி பெற்று வெளிவந்த உடனேயே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் உதவி நல்லாசிரியனாய்த் திகழ்ந்தார். இருவருடங்களே அங்கு சேவை செய்யமுடிந்தது; வட்டுக்கோட்டை இந்து ஆங்கிலப் பாடசாலை தலைமை ஆசிரியராக வருமாறு அழைத்தது. அங்கு 5 ஆண்டுகள் நல்ல சேவை ஆற்றி மக்கள் உள்ளத்தில் நல்லதோர் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இங்குத் தான் அவருடைய சமயசேவை ஆரம்பமாகியதென்று கூறலாம். 1928-ஆம் ஆண்டு மகாத்மாகாந்தி இலங்கைக்கு வந்ததை யாவரும் அறிவர். மயில்வாகனனாருடைய பெருமுயற்சியால் அவருடைய பாடசாலையை மகாத்மாகாந்தி தரிசித்தார் என்றால் அவருடைய சமய சமூக சேவைக்கு வேறு அத்தாட்சியே வேண்டியதில்லை.

1938-ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை அங்கத்தவராகச் சேர்ந்தார். இவருடைய சேவையை முன்பே அறிந்துகொண்ட சைவ பரிபாலன சபையினர் இவரை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டனர். 1940-இல் சைவ பரிபாலன சபையின் காரியதரிசியாகி, பத்து ஆண்டுகள் தொடர்ந்து சபைக் காரியதரிசியாகப் பணி ஆற்றினார்; இந்தப் பத்து ஆண்டுகளும் சபையின் பொற்காலம் என்றே கூறவேண்டும்.

மயில்வாகனனாருடைய அயரா முயற்சியினால் நாவலர் ஆச்சிரம மண்டபம் 1945இல் கட்டப்பட்டது. நாவலர் பெருமானுடைய நினைவாக நாவலர் ஆச்சிரம மண்டபம் கட்டப்பெற்றதும் அம் மண்டபம் மயில்வாகனனாருடைய சமய சேவையின் நினைவுச் சின்னமாகவும் விளங்குகின்றது. வேலணையைச் சேர்ந்த நாச்சிமார் கோயிலையும், நாரந்தனை வடக்கு தான்தோன்றி அம்மன் கோயிலையும் பரிபாலிக்கும் பொறுப்பு எமது சைவப் பெரியாருக்குக் கிடைத்தமையும் பெருமைக்குரியதொன்றாகும்.

இவர் சபையின் பிரச்சார அமைச்சராக இருந்த காலத்தில் பல சைவ மகாநாடுகள் கூட்டப்பட்டதை உலகம் அறியும். சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார், திரு. சச்சிதானந்தம்பிள்ளை, திரு. க. வச்சிரவேலு முதலியார், காசிவாசி ஈசான சிவாச்சாரியார், தருமபுர ஆதீனம் சண்முககுரு மகா சந்நி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம், திரு. அ. சரவணமுதலியார், மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள், மதுரை ஆதீனம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் போன்றவர்கள் ஈழத்திற்கு வந்து சைவசித்தாந்த மகாநாடுகளில் பங்குபற்றி சமயப் பிரச்சாரம் செய்வதற்கு மூல காரணராக விளங்கியவர் நமது மயில்வாகனனார் அவர்களே தான் என்றால் அவர்களது சமய உள்ளத்தையும் சைவத் தொண்டினையும் யாரால்தான் அளவிட்டுரைக்க முடியும்.

அச்சுவேலி பிரம்மஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் மூலம் குருமார் பயிற்சியும், ஓதுவார் T. A. S. இராசசேகரம் அவர்கள் மூலம் தேவார வகுப்புகளும் நடைபெறச் செய்தார். இப் பணிகளுக்கிடையே நவாலியூர் சோமசுந்தரப் புலவரிடமும், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களிடமும் இலக்கண இலக்கியத்தை முறையாக ஆராய்ந்து கற்றுத் தமது அறிவினையும் மேம்படுத்திக் கொண்டார்.

தமது அறிவை வளர்த்தும் அதன் மூலம் சமய சமூக சேவையிலும் தம்மை முழுவதாக ஈடுபடுத்திக் கொண்ட மயில்வாகனனாருக்கு வழிகாட்டிகளாக வட்டுக்கோட்டை அம்பலவாணசுவாமிகளும், உயர்திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களும், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களும், திரு. அ. விஸ்வநாதபிள்ளை அவர்களும், ஸ்ரீமத். யோகர்சுவாமிகளும் அமைந்தமையே பெரும் பேறாகும்.

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கியமாக நமது மயில்வாகனனார் விளங்கினார். சிவன்கோயிலைச் சேர்ந்த 40 பரப்புக் காணியை வேற்றுச் சமயத்தார் வாங்க முனைந்தபோது தகுந்த நேரத்திலே ஏற்ற நடவடிக்கை எடுத்து அதனைத் தடுத்த பெருமை திரு. மயில்வாகனனாருக்கேதான் உரியது. பிரம்மஸ்ரீ ச. குமார சுவாமிக் குருக்களின் மகன் திருக்கேதீஸ்வர புராணத்தை 1970-ம் ஆண்டில் திருக்கேதீஸ்வரத்தில் அரங்கேற்றுவதற்கு மூலகாரணரும் இவரே.

1947இல் நெடுந்தீவில் மிஷனைச் சேர்ந்த பள்ளிகளில் சமய மாற்றம் நடைபெறுவது கேட்டு உடனே அங்கு விரைந்து திரு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களுடைய பண உதவியுடன் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். 1975ஆம் ஆண்டு தொடக்கம் பசுப் பாதுகாப்புச் சபையின் தலைவராயிருந்து, கோயில்களைக் கசாப்புக் கடைகளாக மாற்றம் அடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாது தடுத்தார். தம்மிடம் கல்விகற்ற பல சைவ மாணவர் களை சைவ அநுட்டானங்களில் ஈடுபடச் செய்தார். தானே சிவபூசை செய்யும் முன்மாதிரியாளராக இருந்து கொண்டு தன்னை நாடிவந்தோரையும் அதில் ஈடுபடச் செய்தார். நமது மயில்வாகனனார் தமது இருபதாவது வயதில் சமய தீட்சையும், நாற்பத்துநாலாவது வயதில் விசேட நிர்வாண தீட்சையும் பெற்று இன்றுவரை அதனை அநுட்டித்து வருவதே அவரது இத்தொண்டுகளுக்கெல்லாம் காரணமாகும். வேதாரணியத் தைச் சேர்ந்த அ. க. செல்லையா குருக்கள் அவர்களே இவரது நிர்வாண திட்சா குரு ஆவார்.

1960 ஆம் ஆண்டு தமது அறுபதாவது வயதில் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பின் தனது வாழ் நாள் முழுவதையுமே சைவத் தொண்டுக்காக அர்ப்பணித்துக் கொண்டார். தற்போது வெளியே நடமாடித் திரியும் உடல் நலம் இல்லை என்றாலும் வீட்டில் இருந்து கொண்டே சமயசமூக வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கிக் கொண்டே இருக்கின்றார். இத்தகைய ஒரு தொண்டரைப் பார்ப்பதே வாழ்வில் பெரும் பேரு கும்.

சுப்பிரமணிய பாரதியாருக்குக் கண்ணன்

நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்

வாய்த்தது போன்று நமக்கும் மயில்வாகனனார் வாய்த்தமை கலியுகவரதன் அருள் என்றே கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## "எனது அன்புக்குரிய மாணாக்கன்"

நான் யாழ். இந்துக்கல்லூரியில் 1912-ம் ஆண்டு 5-ம் வகுப்பு ஆசிரியராய் இருந்தேன். அப்பொழுது மு. மயில்வாகனம் வேலணையிலிருந்து வந்து மாணாக்கருள் சேர்ந்தார். அவர் அப்பொழுது புத்திக் கூர்மையுடைய மாணாக்கனாகவும், கல்வி கற்பதில் அதிகம் சிரத்தையெடுப்பவராகவும் இருந்தார். அதனால் நான் அவரிடத்தில் அன்பு கொண்டு கல்வியில் ஊக்குவித்து வந்தேன். அந்த வயதிலேயே அவர் கடவுள் பக்தி உடைய வராகவும், நற்குண நற்செய்கையுடையவராகவும் விளங்கினார்.

அவர் வருட நடுவில் பாடசாலையிற் சேர்ந்திருந்தபோதிலும், பாடங்களில் மிக்க திறமையாயிருந்ததால் அடுத்த வகுப்புக்கு ஏற்றிவிடும்படி நான் கோரியது இன்னும் என் உள்ளத்தில் பசுமை நினைவாக இருக்கிறது. அவர் ஆசிரியப் பயிற்சிக்குப் போகும்வரை இந்துக் கல்லூரியிலேயே படித்தார்.

1920-ம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்புத் தொடக்கம் யோகர்சுவாமி அவர்களுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அந்தக் காலத்தில் வண்ணார்பண்ணையிலுள்ள வாலிபர்கள், என் நண்பர்கள் பிறக்டர் C. N. சுப்பையா, நவரத்தினம், வைத்தியர் கதிரவேற்பிள்ளை முதலானோர் சுவாமியவர்களை அடிக்கடி சந்திப்பது வழக்கம். சமய விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருப்போம். திரு. மு. மயில்வாகனம் அவர்களும் எங்களுடன் சேர்ந்து கொள்ளுவார்.

யோகர்சுவாமிகளுடைய நல்ல ஆசியும், உபதேசங்களும் திரு. மு. மயில்வாகனம் அவர்களது சமய வாழ்க்கைக்கும், தொண்டுக்கும் உதவியாயிருந்தன. அவருக்கு அமுத விழாக் கொண்டாடுவதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் நீடூழி வாழப் பிரார்த்திக்கிறேன்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
1-10-80

செ. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம் - சைவப்பெரியார்

**சிவத்திரு மு. மயில்வாகனம் அவர்களின்**

81வது பிறந்தநாள் விழாவிற்கு (5-10-80)

சென்னை சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம்

## திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களது வாழ்த்து.

"அண்ணல் ஆலவாய் நண்ணி னான்றனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே"

**சைவசமயக் காவலரே!**

தாங்கள் சேய் நாட்டின், சைவத்தமிழ்வாழ், சான்றோர்கள் தோன்றிப் புகழ்பெற்ற யாழ்ப்பாணத்தில் சைவப் பற்றுள்ள நற்குடும்பத்தில் புகழோடு தோன்றி, இளமையிலே கற்க வேண்டிய நூல்களைக் கசடறக் கற்று ஒரு ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி, இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டு மூன்று பிள்ளைகளையும் இரு மகளிரையும் பெற்று நல் வாழ்வு வாழ்ந்து வருவது சைவ உலகம் அறியும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற மொழிக்கு இலக்கியமாக வாழ்ந்து வருவது கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

**சைவப் பெருமகனாரே!**

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்று அதனைப் பயனுடையதாக்கிக் கொள்ள சிவபூசை, அடியார் பூசை முதலியவற்றைச் செவ்வனே நாளும் செய்துவரும் பெருந்தகையாளரே! நீவிர் "இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்" என மனமார வாயார வாழ்த்துகிறேன். சைவசமயத்தைப் பரப்பத் தோன்றிய பழம்பெரும் சபையாகிய சைவ பரிபாலன சபையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராக இருந்து அதைக் கட்டிக் காத்துவரும் பெருமை தங்களேயே சாரும் என்ருல் இதனை மறுப்பாரில்லை. இதுமட்டுமா? இலங்கையின் வார வெளியீடாகிய "இந்துசாதனம்'' என்னும் இதழின் ஆசிரியராக இருந்தீர்கள். சமயத்தை வளர்த்துவரும் நற்ருெண்டு மேலும் சிறப்புற்று ஓங்குக என வாழ்த்துகிறேன். சேய் நாட்டின் சமய குருவாக விளங்கிய திரு யோகர் சுவாமிகள் அவர்களின் குருவருள் தங்களுக்கு உற்றதுணையாயுள்ளது பாராட்டிற்குரியது.

சைவப்பேரறிஞரே!

தாங்கள் ஆற்றிவரும் நற்ருெண்டுகள் மேலும் மேலும் பலவாகப் பெருகிச் சேய்நாடு முழுவதும் சிவமணம் கமழச் செய்யப் போதுமான ஆற்றலையும், நீண்ட ஆயுளையும், இம்மையிலே பெறவேண்டிய சகல செல்வங்களையும் பெற்று, நாட்டிற்கும், மொழிக்கும்; சைவசமயத்திற்கும் பணிபுரிந்து புகழுடன் வாழக் கந்தப்பெருமானும் எங்கள் சொந்தப் பெருமான் திருவருள் பாலிப்பானுக.

''வாழ்க மயில்வாகனனர்! வளர்க சைவம்! ஓங்குக தங்கள் புகழ்''
''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

சென்னை-41,
22-9-1980.

அடியவன்
கயப்பாக்கம்-சோமசுந்தரம் செட்டியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இளமை நினைவுகள்

நெடுந்தூரம் பயணஞ்செய்த ஒருவன் ஆற அமர இருந்து, தான் பிரயாணஞ் செய்தபோது அலையாக வந்த இன்ப துன்ப நிகழ்ச்சிகளை எண்ணி அசை போடுவது போன்ற ஒரு மன நிறைவுடன் இதை எழுதுகிறேன். அடியேன் பிறந்த ஆயிரத்துத் தொளாயிரமாம் ஆண்டு புரட்டாதி மாதம் ஐந்தாந்தேதி தொடக்கம், இந்த நீண்ட எண்பது ஆண்டுகள் வரை நிகழ்ந்த வற்றை முழுமையாகக் கூற முடியாவிடினும், முக்கியமான சில வற்றைக் கூற விழைகிறேன். ஆயிரத்துத்தொளாயிரத்துஆறும் ஆண்டு புரட்டாதி மாதத்தில் செங்கமலையர் கனகசபாபதிப்பிள்ளை அவர்களால் ஏடுதுவக்கப்பெற்று, வேலணைச் சைவப்பிரகாச வித்தியசாலையில் ஆரம்பக் கல்வி கற்றேன். அப்பொழுது கற் பித்த ஆசிரியர்கள் தீட்சை பெற்றுச் சிவபூசை செய்து சைவ வாழ்க்கை வாழ்ந்தவர்கள். இச் சூழ்நிலை சைவமாணாக்கர்களுக் குச் சைவ வாழ்வு வாழ ஏதுவாயிருந்தது. சைவப் பெரியார் நாவலர் ஐயாவுடைய மாணாக்கன் விஞசித்தம்பி கந்தப்பிள்ளை அவர்கள் (யாழ். சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபகர்) சைவப் பிரசங்கங்கள் செய்வதைக் கேட்டிருக்கிறேன். நயினாதீவு கைலாயநாதக் குருக்களின் தந்தையார் ஐயாத்துரைக் குருக்கள், பரமேஸ்வரக் குருக்களின் தந்தையார் சுவாமிநாதக் குருக்கள், மற்றும் தீவுப் பகுதிகளிலுள்ள பிராமணச் சிறூர்கள் கந்தப்பிள்ளை உபாத்தியாயரிடம் சைவ நூல்களைக் கற்றூர்கள். கந்தப்பிள்ளை அவர்களின் மாணாக்கன் கா. நாகலிங்க உபாத்தியாயர் புங்குடு தீவில் புராணங்களுக்குக் கருத்துச் சொல்லியும், தேவார பாராயணம் முறையாய்க் கற்றுக் கொடுத்தும் வந்தார். ஸ்ரீ ம. தம்பு உபாத்தியாயர் நயினாதீவில் உள்ள மக்களுக்குத் தேவார பாராயணமும் இலக்கண இலக்கியங்களும் கற்பித்து வந்தார். ஆகவே ஏழு தீவுகளுக்கும் சமயம் கற்பிக்க ஏதுவா யிருந்தவர் கந்தப்பு உபாத்தியாயரே. இவர் சிவபதம் அடைந்த தும் நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதர் தாம் பாடிய இரங்கற் பாவில், ''வேலணை என்னும் பதிக்கு 'அ'வைக் காட்டி வைத்த ஆசிரிய மூர்த்தி போனானே போனன்'' என்று குறிப்பிட்டிருக் கிறூர். இக்காலத்தில் சைவக்கல்வி பயில்வதற்கு உதவியாய் ஒரு குரு பூசை மடமுமிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரத்துத்தொளாயிரத்துஎட்டுத் தொடக்கம் ஆயிரத்துத் தொளாயிரத்துப்பன்னிரண்டு வரையில் ஆங்கிலக் கல்வியைத் திரு. த. சொக்கலிங்கம் அவர்களிடமும், திரு. க. சிதம்பரநாதன் (முருகபக்தன் *K. C. Nathan*) அவர்களிடமும் கற்றுவந்தேன். ஆயிரத்துத்தொளாயிரத்துப்பன்னிரண்டாம் ஆண்டு இந்துக் கல்லூரியில் ஐந்தாம் வகுப்பில் வந்து சேர்ந்தேன். அப்பொழுது பிரதம ஆசிரியர் சிவராவ் (*Siva Rao*) அவர்கள். அப்பொழுது நமது வகுப்பு ஆசிரியர் திரு. செ. மயில்வாகனம் அவர்கள். இவர் இளைப்பாறிய அரசாங்க நிரந்தரக் காரியதரிசி ம. ஸ்ரீகாந்தா அவர்களின் தந்தையாராவர். எனது வகுப்பில் இருந்தவர்கள் முன்னாள் ஊர்காவற்றுறை பா. உ. *V. A.* கந்தையா அவர்கள், த. முத்துச்சுவாமிப்பிள்ளை அவர்கள், நல்லூர் அப்புக்காத்து சுப்பிரமணியம் அவர்கள், திரு. நடராசா அவர்கள், பிறக்டர் இராசையா அவர்கள், டாக்டர் N. கோபால பிள்ளை அவர்கள், டாக்டர் வ. பொன்னையா அவர்கள், இன்னும் பலர். புலோலி வ. குமாரசுவாமிப் புலவர் (திரு. சிவபாதசுந்தரம் பிள்ளையின் சிறியதந்தையார்) தாவடிச் சோமசுந்தர பண்டிதர் போன்றவர்கள் சமயபாடம் கற்பித்தார்கள். ஆயிரத்துத்தொளாயிரத்துப்பத்தொன்பதில் கேம்பிறிஜ் சீனியரும், இருபதில் லண்டன் மட்றிக்குலேஷனும் சித்தியெய்தி, அதே ஆண்டு மல்லாகம் ஆங்கில பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்து கடமையாற்றியபின், அளவெட்டி ஆங்கில பாடசாலையிற் கற்பித்தேன். அங்கு வேதாரணியம் அடங்கன்முறை ஸ்ரீமத் அ. கணபதிக்குருக்கள் குமாரர் செல்லையாக் குருக்களிடம் தீட்சை பெற்றேன். நமது சமய வாழ்க்கைக்கு வழிகாட்டியா யுள்ளவர்களில் இவரும் ஒருவர்.

ஆயிரத்துத்தொளாயிரத்துஇருபத்திரண்டாம் ஆண்டில், கொழும்பு ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் பயிலத் தெரிவு செய்யப்பட்டேன். இலங்கை முழுவதும் பதினான்கு பேர்களே தெரிவு செய்யப்பட்டார்கள். யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து எடுபட்டவர் இருவரே. என்னுடன் எடுபட்ட மற்றவர் திரு க. சின்னப்பா அவர்கள். பிற்காலத்தில் இவர் மஹாஜனக் கல்லூரி அதிபராயிருந்தவர். (*Taylor Duraiappah*வுக்குப் பின்) பயிற்சி முடிந்தபின் யாழ். இந்துக்கல்லூரியில் ஆசிரியராய்ச் சேர்ந்தேன். அப்பொழுது பிரதம ஆசிரியர் திரு நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள்.

## "சூரியன் தன் கடமையைச் செய்கிறான்"

ஆயிரத்துத்தொளாயிரத்துஇருபத்தினான்காம் ஆண்டு நண்பர் காரைநகர் சின்னத்தம்பு (துறவி) அவர்களுடன், யோகசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளைத் தரிசிப்பதற்காக கொழும்புத்துறை சென்றோம்: கண்டி வீதியாற் சென்று பஸ்தியான் புத்தகக்கடையை அடைந்த போது, சுவாமிகள் பரி. யோவான் கல்லூரியடியில் இழக்கி லிருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். "அதோ வருகிறார் யோக சுவாமிகள்" என்று சொல்லித் துறவி சின்னத்தம்பு போய்விட்டார். சுவாமிகள் வந்து, ஞைசையப்பர் அச்சியந்திரசாலைக்குக் கிழக்குப் பக்கமாயமைந்த தெருவால் திரும்பித் தெற்கு நோக்கிச் சென்றார். என்னைப் பார்த்து, "நீ யார்? எங்கே வந்தாய்?" என்றார். "நான் சுவாமிகளைத் தரிசிக்க வந்தேன்", என்றேன். பின்பு அவர் சூரியனைக் காட்டி, "அவன் தன் கடமையைச் செய்கின்றான்; நான் என் கடமையைச் செய்கின்றேன்; நீ உன் கடமையைச் செய்" என்றார். இருவரும் தெற்கு நோக்கிச் சென்றோம். அர்ச். சம்பத்திரிசியார் கோவில் முன் வந்ததும், "இதுவும் ஒரு தேவாலயம்; இதிலும் ஆண்டவன் இருக்கிறார்; கும்பிடடா" என்றார். அதன்பின் பல வீதிகளையுங் கடந்து மத்திய கல்லூரிக்குத் தெற்கே தேவாலய வீதியில், நான்கு சில்லுகளின்மேல் அமைந்த ஒரு பெட்டிக் கடையை அடைந்தார். அங்கு ஒரு இதரப்பழக் குலை தொங்கிக் கொண்டிருந்தது. அதில் ஒரு பழத்தை விலைக்குப் பெற்று சுவாமிக்குக் கொடுக்க வேண்டுமென மனதில் நினைத்தேன். உடனே சுவாமி, "நீதான் ஆசைப்படுகிறாய், தின்" என்று ஒரு பழத்தைப் பிடுங்கி என்னிடம் தந்தார். அதன் பின்பு, "சரி, நீ போயிட்டுவா" என்று சொல்லி அவர் சென்றார். நானும் வீடு திரும்பினேன்.

ஆயிரத்துத்தொளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு வட்டுக் கோட்டை சைவ ஆங்கில வித்தியாசாலைக்குத் தலைமை ஆசிரியராய் மாற்றலாகிச் சென்றேன். அங்கு செல்வதற்குச் சில தினங்களுக்கு முன், சுவாமி அவர்களுடன் கொழும்புத்துறை சென்று, சொற்ப பணத்தைத் தட்சணையாக வைத்து ஆசீர்வாதம் பெற்றேன்: வட்டுக்கோட்டை சென்ற சில நாட்களின்பின், ஒருநாள் சுவாமிகளிடம் கொழும்புத்துறைக்குச் சென்றேன். அங்கு, அளவெட்டி ஆசிரியர் செ. மயில்வாகனமும், கஸ்தூரி முத்துக் குமாருவின் மகன், வைத்தியர் கதிரவேலுவுமிருந்தார்கள். "நாங்கள் இன்று சமையல் செய்யவேண்டும். மயில்வாகனம் நீ சின்னக்கடைக்குப் போய் அரிசி, மிளகாய், புளி, விறகு முதலிய பொருட்களை விலைக்கு வாங்கிவா" என்று நான் முன் தட்சணையாகக் கொடுத்த பணத்தைச் சுவாமி தந்தார். நான் சின்னக்கடைக்குச் சென்று அரிசி, காய்கறி ஆதிய சாமான்களை விலைக்குப் பெற்றேன்: சாமான்களை ஒரு உமலில் போட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி, உமலேயும் விறகுக் கட்டையும் சுமந்து கொண்டு சென்றேன். அன்று நகரசபைத் தேர்தல் தினம். வீதி வழியாய் ஆட்களும், கார்களும் போக்குவரவு செய்துகொண்டிருந்த நேரம். நான் ஆச்சிரமத்தை அடைந்து படலையைத் திறந்து சென்றேன். "இங்கே வருகிறவர் ஒரு பாடசாலைத் தலைமை ஆசிரியர். இவருக்குக் கொஞ்சம் வெட்கம் இருக்கிறது" என்று சுவாமி சொன்னார். நான் கொண்டுவந்தவற்றைச் சுவாமிக்கு முன்னால் வைத்தேன். அப்பொழுது ஆச்சிரமம் . மண்சுவரும், ஓலைக்கூரையும் அடங்கிய கட்டிடம். நடுப்பாகத்தில் இரண்டு சுவர்கள். அவற்றின் நடுவில் பாதை. குட்டிச்சுவரின் வட புறத்தில் ஒரு அடுப்பு. சமையலுக்குரிய பாத்திரங்களைக் கழுவித் தாடியை ஒதுக்கிக்கொண்டு, ஊதி ஊதி நெருப்பை மூட்டினார் சுவாமி. அங்கு இருந்த மயில்வாகன மாஸ்டர், வைத்தியர் கதிரவேலு காய்கறி திருத்தினார்கள். நானும் அவ்வாறு செய்ய முயன்றேன். "டேய் நீ சும்மாயிரு" என்றார் சுவாமி. நான் அவ்வண்ணம் சும்மாயிருந்தேன். சமையல் பூர்த்தியானதும், வாழை இலை போட்டு எல்லோரும் சுவாமிகள் சமைத்த அமிர்த மான உணவை உண்டோம். இவ்விதம் சுவாமி சமையல் செய்ததை நான் முன்னும் காணவில்லைப் பின்னும் காணவில்லை.

வட்டுக்கோட்டை சைவ ஆங்கில பாடசாலையில் அப்பொழுது சைவப்பற்றுள்ள ஆசிரியர்களாய நவாலியூர் சோமசுந்தரப்புலவர், நவாலியூர் S. நவரெத்தினம், வட்டுக்கோட்டை நி. ராசகாரியர், பண்டிதர் பே. சுப்பிரமணியம் போன்றோர் கற்பித்தார்கள். பள்ளிக்கூடத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் புலவர் தயாரித்த "உயிரிளங்குமரன்" என்ற நாடகம் நடிக்கப் பட்டது. அந்நாடகம் விரிவாக்கப்பட்டுக் கொழும்பு முதலிய இடங்களிலும் நடிக்கப்பட்டுப் புகழ்பெற்றது. சோமசுந்தரப் புலவரின் குமாரர்கள் இளமுருகனார், நடராசா இருவரும் நம் முடைய அன்பு மாணாக்கர்கள். நான் இருந்த விடுதியிலேயே பிள்ளைகளும் விடுதி மாணாக்கர்களாயிருந்தனர். சுளிபுரம் முத்துவேல்சுவாமி, வித்துவான் கா. கி. நடராஜன் விடுதியில் இருந்த ஒரிருவராவர். ஒருநாள் யோகர்சுவாமிகளும் வந்து மாணாக்கர்களை ஆசீர்வதித்து, அவர்கள் சிறிதுநேரமேனும் மௌனம் அனுட்டிக்கப் பயிலவேண்டும் என்றார். இந்தச் சிறந்த உபதேசத்தை நமது நாட்டில் கல்வித்துறையில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களும், அடியார்களும் சிந்திக்க வேண்டும். தினமும் பள்ளிக்கூடம் ஆரம்பமாகும்போது ஐந்து நிமிடம் மௌனம் பயிலுதல் சிறந்த பயனை அளிக்கும். உடல் வலிமை, மனச் சாந்தி ஆகிய செல்வங்களைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு சான்றோர்களின் கடிதங்கள்

ஆயிரத்துத்தொளாயிரத்து இருபத்தெட்டாம் ஆண்டு மகாத்மா காந்தி அடிகள் இலங்கைக்கு விஜயம் செய்தார். யாழ்ப்பாணத்தில் பலபாகங்களுக்குச் செல்லும்போது, வட்டுக் கோட்டை - சித்தங்கேணி வீதியால் வந்தபொழுது, பாடசாலை முன்பாக ஒரு பந்தல் போட்டுக் கதர்மாலை, பூமாலைகள் அவருக்கு அணிவித்து, பணமுடிச்சு அளித்து வரவேற்றோம்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீமத் அம்பலவாணசுவாமிகள், என்னைத் தனக்குச் சீடனாய் வரும்படி பின்வருமாறு விளித்துக் கடிதம் எழுதியிருந்தார். "கரணவாய் ஆதீனத்துக் குரு பரம்பரையிலேயுடைய, திருவடி பெற்றுப் புனிதமடைந்த வேலணையம்பதியில் உற்பவித்த, மயில்வாகனம்பிள்ளைக்கு எழுதுவது" இவ்விளிப்பிலிருந்து வேலணைப்பதி சைவத்தின் உறைவிடமாயிருந்தது என்பது தெளிவாகிறது.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஒரு சைவ சங்கம் (மிஷன்) ஆரம்பிக்க வேண்டுமென்று விருப்பங்கொண்டு, என்னை அதற்குத் தலைவராய்ச் சேர்க்கும் நோக்கத்துடன் சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கட்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அப்பெரியார் நமக்குக் கீழ்க்காணும் கடிதத்தை எழுதியிருந்தார். (ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அக் கடிதத்தின் மொழி பெயர்ப்பு இது.)

எனது அன்புமிக்க மயில்வாகனம் அவர்களுக்கு,

பிரமச்சாரியம் அல்லது சந்நியாசம் ஆகிய நிலைகளில் ஒழுகுவதற்கு விரும்பும் சைவ இளைஞர்களை ஏற்றுக்கொள்வதற்கு, இராமகிருஷ்ண மிஷன் போன்ற ஒரு சைவ சங்கத்தை (மிஷன்) நிறுவுவதற்கு சேர். பொன். இராமநாதன் அவர்கள் பெரு விருப்பம் கொண்டுள்ளார்கள். வேறு வழிகளிற் செலவழிக்க இயலாத நிரம்பிய செல்வத்தை இத்தகைய சங்கத்தைத் தோற்றுவிப்பதற்கு உதவ விரும்பியுள்ளார். இப்படியான ஒரு சங்கம் இன்றி எங்கள் சமயத்தை முறையாக வளர்க்க முடியாது. மணமானவர்களின் செயல்களெல்லாம் அரை மனதுடன் செய்யப்படுவனவும், அதிக நாள் நீடிக்காதனவுமாகும். அப்புக்காத்து S. இராசரெத்தினமவர்கள் தாங்கள் இத்தகைய வாழ்வில் ஈடுபட விருப்பமுடையராய் இருப்பீர்களெனத் தெரிவித்தார்கள். அப்படியாயின், வருகிற ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் 4-30 அளவில் நாங்கள் இருவரும் சேர். இராமநாதனிடம் போய், இச்சங்கத்தின் நோக்கங்களையும் அது எந்த வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்ற வேண்டுமென்பதையும், அவருடன் கூடிக் கலந்து ஆராய்வோமா? இத்தகைய ஒரு பணிக்கு அவர் ஒரே ஒருவரால் தான் பொருளுதவி செய்யமுடியும்; அவருடைய வாழ் நாட்களிலேயே இத்தகைய சங்கத்தைத் தாபிக்காது போனால், இது போன்ற ஒன்று எங்கள் எதிர்காலத்தில் தாபிக்க முடியுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. காணி, கட்டிடம், பொருள் ஆதியன ஆயத்தமாய் இருப்பதாயும், சேவைக்கேற்றவர்களே தேவைப்படுவதாயும் அவர் சொன்னர்.

தங்கள் அன்புள்ள
ச. சிவபாதசுந்தரனர்

பெற்ரேர் சகோதரர் ஆகியோரைத் தாபரிக்கும் பொறுப்பை உணர்ந்த சிறியேன் அவ்வெண்ணத்துக்கு இசையவில்லை. கடிதத்தில் கண்டபடி இதுவரை அத்தகைய சங்கம் ஒன்று அமைக்கப்படவுமில்லை.

## சிவபூஜையும், திருமுறைப் பூஜையும்

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதாம் ஆண்டில் யாழ் இந்துக்கள் லூரிக்கு உதவி ஆசிரியராய் வந்து சேர்ந்தேன். அங்கு ஆங்கிலம், பூமிசாஸ்திரம், தமிழ், சமயபாடம் ஆகியவற்றைக் கற்பித்தேன். ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தெட்டாம் ஆண்டளவில், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையில் ஓர் அங்கத்தவனய்ச் சேர்ந்தேன். இந்து சாதனப் பத்திரிகை ஆசிரியராய் இருந்து நெடுங்காலம் சைவப் பணியாற்றிய பெரியார் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையைச் சைவ மக்கள் மறக்க ஒண்ணுது. எளிய நடையில் ஹாஸ்யமாக சமய உண்மைகளையும், சமய சீர்திருத்தத்துக்குரிய கட்டுரைகளையும், இலக்கியக் கட்டுரைகளையும் எழுதுவதில் அவருக்கு நிகர் அவரே. அவரின் கட்டுரைகள் ஏழைக் குடும்பங்கள், பொது ஸ்தாபனங்கள், சமய ஆலயங்கள் சிறப்படைய ஏதுவாயிருந்தன.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதில் சிறியேன் திருமுறை பூஜை செய்யத் தொடங்கினேன். வட்டுக்கோட்டை சைவ கலாசாலையை விட்டு விலகியபோது, ஆசிரியர்களும் மாணவர்களும் எமக்கு ஒரு பிரியாவிடைக் கூட்டம் நடத்தினர்கள். அக்கூட்டத்தில் கயப்பாக்கம் சதாசிவச்செட்டியார், அழகாகப் பட்டுறையுடன் வெளியிட்ட மூவர் தேவாரம் தனித்தனிப் பிரதியாக, எமக்குப் பரிசாக வழங்கப்பட்டது. சோமசுந்தரப் புலவரே எமக்கு வழங்கினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை பூஜா முறைகளை அக்காலம் நீராவியடிக் குருக்கள் மடத்தில் வசித்த ஸ்ரீ ந. சோமசுந்தரக் குருக்கள் கற்பித்தார். அவ்விதம் திருமுறைப் பூஜை தொடர்ந்து செய்துவரும் காலத்தில், ஆயிரத்துத்தொளாயிரத்துநாற்பத்துநான்காம் ஆண்டு வேதாரணியம் தேவாரம் ஸ்ரீ க. செல்லையாக் குருக்கள் அவர்கள் விசேட நிர்வாண தீட்சை செய்து வைத்தார்கள். இறைவன் அருளால் சிவபூஜையையும், திருமுறைப் பூஜையையும் இன்றளவும் தொடர்ந்து செய்து வருகிறேன்.

## மலர்ந்து மணம் பரப்பிய சைவச்சபை

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எமது நாட்டை ஆட்சிபுரிந்த காலத்தில், கிரகணம் பீடித்த கதிரவன் போன்று நமது சமயத்தின் பிரகாசம் மங்கியிருந்தது. இவர்களில் முன்னைய இரு ஆட்சியாளர் காலங்களில் எமது வழிபாட்டுக்குரிய கோவில்கள் அழிக்கப்பட்டதுடன், எமது பரம்பரையான சைவ பழக்க வழக்கங்களும் மாற்றப்பட்டன; ஞானப்பிரகாசர் எனப் பெயரிய மகான், அன்றைய அதிகாரியின் கட்டளைப்படி அவர்கள் உணவுக்காகப் பசுமாடு ஒன்றை வழங்க மனம் ஒருப்படாதாராய், இரவோடிரவாய்த் தன் பிறந்த நாட்டையும் சிறந்த சுற்றத்தையும் விட்டுப் பிரிந்து, கடல்மார்க்கமாகவே வேதாரணியம் சென்று சேர்ந்தார். அங்கிருந்து தில்லையை யடைந்து நாற்பது நாள் உபவாசமிருந்து, எம்பிரான் திருவருளால் தீட்சை பெற்றுச் சந்நியாசியாகிப் பல தொண்டுகள் சிதம்பரத்தில் செய்து வந்தார். அவர் தொட்ட குளமும், கட்டிய மடமும் பிரசித்தியானவை. இவர் வடமொழியிலுள்ள ஆகமங்களைத் தமிழில் மொழி பெயர்த்ததோடமையாது, சிவஞானசித்தியாருக்கு உரையும் எழுதியுள்ளார்.

இத்தகைய கொள்கை வீர வழித்தோன்றல் நாவலர் பெருமான், அவர்கள் செய்த சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் விரிக்கிற் பெருகும். சைவசமயப் பிள்ளைகள் சமய முறையிலே கல்வி கற்கவேண்டும் என்ற பெருவிருப்பம் இவரிடம் இருந்தது. இதனாலேயே பாலர்கள் பயில்வதற்கேற்ற பாலபாடங்களை எழுதியதோடமையாது, சைவசீலர்களும் பயன் பெறும்படி திருமுறைகள், சித்தாந்தநூல்கள் போன்றவற்றையும் பதிப்பித்தார். அவர் முயற்சியில் உருப்பெற்றவை பல வித்தியாசாலைகள். வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை இவற்றுள் முதலிடம் வகிக்கிறது; (இப்பொழுது பெயர் மாற்றம் அடைந்துள்ளது.)

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்பெருமான் சிவபதம் அடைந்தபின், அவருடைய மாணாக்கர்களும், அவர் வழி ஒழுகியவர்களுமாகிய பெரியார்கள் கூடி, ஐயா அவர்களது நோக்கம் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்னும் கருத்துடன் ஒரு சபையை அமைக்கத் தீர்மானித்தார்கள்.

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தெட்டாம் ஆண்டு வண்ணார் பண்ணைச் சிவன்கோவிலில் விசேட பூசை செய்து, குத்துவிளக்கேற்றி, அவ்விளக்கை வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குக் கொண்டுவந்து, மங்களகரமாகச் சபையை ஆரம்பித்தார்கள்; தலைவர் ச. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள், காரியதரிசி த. கைலாயபிள்ளை அவர்கள், தனாதிகாரி மு. பசுபதிச் செட்டியார் அவர்கள், இச்சான்றோர்களின் சேவையில் முகிழ்த்ததே யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆகும்.

பின் இதன் பொற்காலத் தலைவர்களாய் சேர். பொன். இராமநாதன், சேர். W. துரைசுவாமி, மு. சபாரெத்தின முதலியார், அ. கனகசபை அவர்கள் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, அதிகார் நாகநாதன், நீராவியடி அ. தில்லையம்பலம், R. சிவகுருநாதர், த. முத்துச்சுவாமிப்பிள்ளை, P. நாகலிங்கம் ஆகிய பெரியார்கள் இருந்து திறம்பட நிர்வகித்து வந்தார்கள். இவர்கள் காலங்களில் சபைக்குரிய சைவப்பிரகாச யந்திரசாலையில், பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கேற்ற நூல்களும், சைவப்பிரசுரங்களும், காலந் தவறாது இந்து சாதனத் தமிழ், ஆங்கிலப் பதிப்புகளும் பிரசுரிக்கப்பட்டன. இப்பிரசுரங்களின் விற்பனையால் இச்சபை செழிப்புற்றுக் காணிகளையும், கட்டிடங்களையும் கொள்வனவு செய்து தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்ட தோடமையாமல், இதனுடைய சேவையில் நம்பிக்கை வைத்து, இதனிடம் சைவ அபிமானிகள் கொடுத்த தர்மச் சொத்துக்களையும் எவ்வித களங்கமுமில்லாது பாதுகாத்து வந்தது; தான் கொண்ட நோக்கங்களில் சிறிதும் பிறழாது, சைவப்பிரசாரங்கள், மகாநாடுகள், புராணபடனங்கள், பூசைகள், குருபூசைகள், சித்தாந்த வகுப்புகள் போன்ற பலவற்றை காலந் தவறாது நடத்தி வந்தது. சுருங்கச் சொன்னால் இப்பெரியார்களின் தலைமைக் காலத்தில் சபை இளமைப் பொலிவோடு பீடு நடைபோட்டு, உலகப் பிரசித்தி பெற்று விளங்கியதெனலாம். இவர்கள் செய்த தொண்டுகளிலும் பார்க்க இன்னும் சிறந்த தொண்டு செய்து இச்சபையை மேலும் விளங்கச் செய்ய, நன்மனம் படைத்த பல சைவ மக்கள் முன்வந்து முயற்சி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ மகாநாடு

ஆயிரத்துத்தொளாயிரத்துநாற்பதாம் ஆண்டு அடியேன் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி இந்து வாலிப சங்கத்துக்குத் தலைவனுயிருந்தேன். அக்காலம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபை நிர்வாகத்தின் கீழ் பதினுன்கு பள்ளிக்கூடங்கள் இருந்தன. யாழ். இந்துக் கல்லூரி சைவ இளைஞர் சங்கத்தையும், மற்றும் ஏனைய பள்ளிக்கூடங்களின் இந்து இளைஞர் சங்கங்களையும் இணைத்து, யாழ் இந்துக் கல்லூரி அதிகாரசபையின் கீழுள்ள பள்ளிக்கூட மத்திய இந்து வாலிபர் சங்கத்தை நிறுவினேம். அதற்குத் தலைவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அடியேன் காரியதரிசியாகக் கடமை ஆற்றினேன். சங்கத்தின் பிரசுரமாக ஔவையார் எழுதிய "விரும்பித்தொழுவார்" எனும் புத்தகம் வெளியிடப்பட்டது. இச் சங்கம்தான் கோவை சிவக்கவிமணி ஸ்ரீ C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களை அழைத்து, யாழ் இந்துக் கல்லூரியின் கிழக்குப் பக்கமாயமைந்த தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில், சிறப்பான சைவ மகாநாட்டை நடத்தியது. அவருடன் ஸ்ரீ C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும் கூட வந்து சைவச் சொற்பொழிவுகள் ஆற்றினர்கள்.

ஆயிரத்துத்தொளாயிரத்துநாற்பத்தோராம் ஆண்டு சென்னைக் கல்வி அதிகாரியாயிருந்த சச்சிதானந்தம்பிள்ளை B. A., B. L. அவர்களையும், பெருஞ்சொற்கொண்டல் புரிசை முருகேசு முதலியார் அவர்களையும் அழைத்தோம். அவ்வாண்டு சைவ மகாநாட்டுத் தலைவராய் சச்சிதானந்தம்பிள்ளை அவர்களே கடமை ஆற்றினர்கள். மகாநாடு முடிந்தபின் யாழ்ப்பாண மக்கள் எல்லோரும் மெச்சி, இன்புற்றுச் செவிமடுக்கும் முறையாக, பெருஞ்சொற் கொண்டல் புரிசை முருகேசு முதலியார் அவர்கள், பாரதப் பிரசங்கத்தை ஒருமாத காலம் தொடர்ந்து செய்தார்கள். இவர் நிரம்பிய ஞாபகசக்தியுடையவர். திருப்புகழோ, திருமுறைகளோ மனனமாகக் கற்றுக் கடல்மடை திறந்ததுபோல் ஓதுவார். மக்கள் பேரின்ப வெள்ளத்துள் மூழ்குவர். அடுத்த வருடம் வச்சிரவேல் முதலியாரவர்களும், முருகேசு முதலியாரவர்களும் வந்தனர். வச்சிரவேல் முதலியாரவர்கள் சித்தாந்த விரிவுரைகளை யாவரும் ஒப்புக்கொள்ளும் முறையில் விளக்கும் ஆற்றல் பெற்றவர்.

## சைவபரிபாலன சபையில் ஆற்றிய பணி

அடியேன் சைவபரிபாலன சபைக்குக் காரியதரிசியாகிய பின்பு, சைவ மகா நாடுகள் சபையின் ஆதரவில் நடத்தப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன. ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்கள், ஸ்ரீ அருணை வடிவேல் முதலியார் அவர்கள், ஸ்ரீ மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமி அவர்கள், மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீன சோமசுந்தரப் பரமாச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம் மெய்கண்டாராதீனப் பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீ தற்புருஷதேசிகர் அவர்கள், ஸ்ரீ சிங்காரவேலர் அவர்கள், சுப்பாக்கம் ஸ்ரீ சோமசுந்தரச் செட்டியார் முதலியவர்கள் வெவ்வேறு மகாநாடுகளில் தலைமை வகித்தார்கள்.

யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையார் இந்துசாதன தமிழ், ஆங்கிலப் பிரசுரங்களையும், சைவ நூல்களையும் வெளியிடுவதற்குச் சைவப்பிரகாச யந்திரசாலையை ஆயிரத்து எண்ணூற்றுஎண்பத்தெட்டாம் ஆண்டு ஸ்தாபித்தார்கள். சைவப் பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்காக, யாழ் இந்துக்கல்லூரியை ஆயிரத்து எண்ணூற்றுஎண்பத்தொன்பதாம் ஆண்டு ஸ்தாபித்தார்கள். கல்லூரி செவ்வனே நடைபெறுவதற்காக அதன் நிர்வாகத்தை ஆயிரத்துத்தொளாயிரத்துஐந்தாம் ஆண்டில், ஓர் அதிகார சபையிடம் ஒப்படைத்தனர். பெரும்பாலான அங்கத்தவர்கள் சைவபரிபாலன சபையிலும், இந்துக்கல்லூரி அதிகார சபையிலும் அங்கம் வகித்தார்கள். இவ்விரு ஸ்தாபனங்களும் சைவ உலகுக்கு இரண்டு கண்கள் போன்றவை. ஒன்றுக்கொன்று ஆதரவாய் இருந்தன. ஆயிரத்துத்தொளாயிரத்துஇருபத்தெட்டாம் ஆண்டுவரை சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ் இந்துக் கல்லூரியில் தென்பாகத்திலே, காங்கேசன் துறை வீதியில் உள்ள வாசலுடன் இருந்தது. கல்லூரிக்கு இடவசதியில்லாமையினால், அச்சியந்திரசாலை கல்லூரிக்குத் தென்புறமாயமைந்த கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. சபையின் கூட்டங்கள் இந்துக்கல்லூரி மண்டபத்திலேயே நடந்து வந்தன. கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் சமயப் பிரசாரக் கூட்டங்களைச் சபையே நடத்தி வந்தது.

சமய நிகழ்ச்சிகள் கல்லூரி விடுதி மாணாக்கருடைய படிப்பிற்குத் தடையாயிருந்த படியால், சபை (இப்பொழுது சிவதொண்டனுக்கு முன்பாக இருக்கும்) சிதம்பரநாதச் செட்டியாருடைய வீட்டில் ஒரு பாகத்தை வாடகைக்குப் பெற்று, நிருவாகச் சபை, புராணபடனம், குருபூசை, சித்தாந்த வகுப்பு முதலியவற்றை அவ்வீட்டிலேயே நடத்தி வந்தது. சிலகாலஞ் செல்லச் சிவதொண்டனுக்கு வடக்கேயுள்ள வீட்டை வாடகைக்கு எடுத்து இச்சற்கருமங்களை நடத்தி வந்தது. சிலகாலம் சென்றபின், இந்துக்கல்லூரிக்கு வட மேற்கில், காங்கேசன்துறை வீதிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகாமையில் ஒரு வீட்டில் இப்பணிகளை ஆற்றி வந்தது. அவ்வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு வீடு தேவைப்பட்டதால், குரு பூசைகளை நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்குத் தென்புறத்தேயுள்ள திலகவதியார் மடத்திலும், முக்கியமான புராண படனங்களை மணிக்கூட்டு வீதியிலுள்ள அரசடிப் பிள்ளையார் கோவிலிலும் நடத்தி வந்தது. இப்படியாகச் சபை கருமங்களை நடத்த இடமில்லாது கஷ்டப்பட்ட காலத்தில், இறைவன் திருவருளால் இப்பொழுது நாவலர் மண்டபம் இருக்கும் நிலத்தைச் சபை அறுதியாய் வாங்கக் கூடிய சந்தர்ப்பமுண்டாயிற்று. அந்நிலத்தைச் சபை அறுதியாகப் பெற்றது. ஊரிலே பணம் சேகரித்து நாவலர் மண்டபம் ஸ்தாபிக்கப்பட்டது. வள்ளல் டாக்டர் P. சுப்பிரமணியம் அவர்கள் இரண்டாயிரம் ரூபாவைத் தந்து உதவினார்கள். அவரே மண்டபத்துக்கு அஸ்திவாரமும் இட்டார். கிழக்குப் பக்கத்திலுள்ள கட்டிடம் மூன்று அறைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் தென்புறத்திலுள்ளது சிவபூஜை அறை. நடு அறை மாகேசுர பூஜைக்கு உரியது. வடபால் அமைந்தது சமையலறை. இம்மூன்று அறைகளும், பழைய தலைவர் காலஞ்சென்ற சிவகுருநாதருடைய பாரியார் உதவிய நிதியைக் கொண்டு கட்டப்பட்டன.

ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டு கயப்பாக்கம் சோமசுந்தரச் செட்டியார் அவர்கள் சைவமகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதற்காக வந்தார். மகாநாடு முடிந்த பின், சைவசித்தாந்த வகுப்பு ஒன்றை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தினமும் நடத்தினார். வகுப்பு முடியத் திருமுறைக் கோயில் ஒன்றை அமைத்து அதனை நாவலர் மண்டபத்தில் நிறுவினார்.

நாவலர் மண்டபத்துக்கு மேற்குப் புறத்தில் ஒரு நால்வர் கோயில் அமைப்பதற்குச் சபை தீர்மானித்தது. சேக்கிழாருக்கும், நால்வருக்குமுரிய திருவுருவங்களைக் கருங்கல்லிற் செய்து உதவ அன்பர்கள் முன்வந்தார்கள். ஒரு சுபதினத்தில் அத்திவாரமும் இடப்பட்டது. அதற்கு உரிய நிதியும் சேர்க்கப்பட்டது. சபை அத்திருப்பணியை இனியும் தாமதியாது ஒப்பேற்றுதல் வேண்டும்.

**தர்மங்கள்:-** உடம்புக்கு இருதயம் இருப்பது போல, அண்டத்துக்குச் சிதம்பரம் இருதய ஸ்தானமாகும். சைவ மக்களுக்குச் சிதம்பரமே முக்கிய ஸ்தலமாகும். சிதம்பரம் தரிசிக்க முத்தி தரும் என்பார்கள். ஈழநாட்டு மக்கள் சிதம்பர நடராஜப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் மீது மிகுந்த பற்றுடையவர்கள்; வருடந்தோறும் அங்கு யாத்திரைக்குச் செல்வார்கள். மக்கள் தங்கி நடராஜப் பெருமானை வழிபடுவதற்கும், பெருமானுக்கு அபிஷேகங்கள் பூஜைகள் விழாக்கள் நடத்துவதற்கும், நிலங்களைத் தர்மசாதனம் செய்து, சிதம்பரத்திலேயே மடங்களையும் நிறுவினார்கள். பன்னிரண்டு மடங்கள் அங்கு அமைக்கப்பட்டன என்று சொல்வார்கள். மானு முதலியார் மடம், செவ்வாய்க்கிழமை மடம், சிவபுரிமடம், வரணிமடம், கல்வியங்காட்டு மடம், புண்ணிய நாச்சியார் மடம் இவற்றில் சில. புண்ணிய நாச்சியார்மட தர்மத்துக்கு முற்காலத்தில் ஞானப்பிரகாச குளத்துக்குக் கிழக்குப் பக்கத்தில் ஒரு மடமிருந்தது. இந்தப் புண்ணிய நாச்சியார் தர்மத்தை நிறுவியவர் யாழ்ப்பாணத்தில் வசித்த புண்ணிய நாச்சி என்னும் பெயரையுடைய அம்மையார். இத்தர்மக் காணிகள் பரந்தன், மறவன்புலவு, கோயிலாக்கண்டி, கொச்சுவில், சண்டிலிப்பாய் முதலிய இடங்களில் இருந்தன. இத்தர்மச் சொத்துக்களை அம்மையாருக்குப்பின் அவரின் சந்ததியார் நடத்தி வந்தனர்; வைரமுத்து என்பவர் கடைசியாக நடத்தி வந்தார். அவருக்குப்பின் புண்ணிய நாச்சிமடத் தர்மசபை நடத்தி வந்தது; அதற்குத் தலைவராக இருந்தவர், நீராவியடி அ. தில்லையம்பலமவர்கள், காரியதரிசி இ. சிவகுருநாதர். தனாதிகாரி ச. சிவகுருநாதர், சி. த. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார், உடுப்பிட்டி கதிர்காமர், வட்டுக்கோட்டை தியாகராசா ஆகியவர்கள் ஏனைய உறுப்பினராவர். பழைய புண்ணிய நாச்சி மடம் அழிந்துபோக மடநிலமும் பிறர் கைவசமாய்ப் போய் விட்டது. அப்பொழுது திரு. அ. தில்லையம்பலம் அவர்கள் தன் சொந்தப்பணத்தில் சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் ஒரு வீட்டை வாங்கி, அதனைப் புண்ணிய நாச்சிமடமாகவும், அன்னை சாலையாகவும் ஒழுங்கு செய்தார். இப்புண்ணிய நாச்சி தர்ம சபை செவ்வனே கடமையை நடத்த முடியாததனால் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து மூன்றும் ஆண்டளவில் யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில், சைவப் பெரியார்கள் ஒரு பகிரங்கக் கூட்டமொன்றை இப்புண்ணிய நாச்சிமட தர்மத்தை முறையாக நிர்வகிப்பதற்கு உரிய ஒழுங்கு செய்யக் கூட்டினார்கள். அக்கூட்டத்துக்குக் கோப்பாய் அதிகார் (Adigar) நாகநாதன் அவர்கள் தலைமை வகித்தார். புண்ணிய நாச்சிமட பரிபாலனத்தை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அத் தீர்மானத்தின் பிரகாரம் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து நான்காம் ஆண்டு புண்ணிய நாச்சிமட பரிபாலனம், சைவ பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டது; இத்தர்மத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவன் புலவில் தோப்புச் சிதம்பர சித்தி விநாயகர் கோவில் என்ற ஓர் ஆலயமுமுண்டு.

**கோயிலாக்கண்டி சிவன் கோவில்:-** இவ்வாலயம் சண்முகம் நாகமணி என்பவரால் இற்றைக்கு நூறு வருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு நெற்காணியும், பனங்காணியும், வரும்படி தரக்கூடிய சிறு தென்னந் தோட்டமுமுண்டு. சுவாமியின் பெயர் திருமூலநாயகர். அம்பாளின் பெயர் திருமூலநாயகி. சண்முகம் நாகமணி என்பவர் சிறப்பாய் இவ்வாலயத்தை நடத்தி வந்தார். பிற்காலத்தில் அதைப் பராமரிக்க இயலாமையால் பரமசாமி ஐயரிடம் ஒப்படைத்தார். இவருக்குப் பின் ஐயரின் மனைவி நாகம்மாள் அம்மையார் நிர்வகித்து வந்தார். அவ்வம்மையார் கோவில் நிர்வாகத்தை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையிடம் ஒப்படைத்தார். சபை சண்முகம் குமரையா என்பவரிடம் கோயில் திருப்பணியை ஒப்படைத்துப் பூர்த்தியாகிய பின் கும்பாபிஷேகம் நடத்தத் தீர்மானித்தது. திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் ஒரு சைவக் குருக்கள் கோயில் நிலத்தில் வந்து குடியேறி விட்டார். திருப்பணி தடைப்பட்டு விட்டது. இப்பொழுது சபை அக் குருக்களை அகற்றுவதற்கு வழக்குத் தொடர்ந்திருக்கிறது.

சங்கானை கிழக்கில் வசித்த டாக்டர் தாமோதரம்பிள்ளையென்பவர் ஒரு சிவன் கோவிலை ஸ்தாபித்து நடத்திக் கொண்டு வந்தார். அக்கோவிலுக்குத் தென்புறத்தில் ஒரு வளவும், கிழக்குப் புறத்தில் இருநூறு யார் தொலைவில் ஒரு வீடுவளவும் உண்டு. இக்கோயில் இப்பொழுது சபையாரால் நடத்தப்பட்டு வருகிறது.

**வேதாரணியம் கார்த்திகை மடதர்மம்:-** ஈழத்தில் பன்னெடுங் காலமாக வேதாரணியத்தைச் சேர்ந்த சைவக் குருமார் குருத்துவம் வகித்து வந்தார்கள். அவர்கள் சைவ ஆசாரம், விசேட நிர்வாண தீட்சைப் பேறுடையவர்களாய் வடமராட்சியில் பல இடங்களிலும், கொழும்பு, மட்டக்களப்புப் போன்ற இடங்களிலும் வசித்து, ஆலயக் கிரிகைகள், சமய கிரிகைகள், விவாகம், தீட்சை சம்பந்தமான கிரிகைகளைச் செய்து வந்தார்கள். அவர்களுடைய சேவையினால் இந்நாட்டில் சைவ ஆசாரம், புலால் உண்ணாமை, திருமுறை பாராயணம் முதலிய சற்கருமங்கள் வளர்க்கப் பெற்றன. இவர்களுக்குச் சொந்தமான கோவில்களும், சொத்துக்களும் உண்டு. இவ்வகுப்பைச் சேர்ந்த குருமார் நீராவியடியில் வசித்துத் தங்கள் குருத்துவக் கடமைகளை நடத்தி வந்தார்கள். இவர்களுக்கு உடுவில், சுன்னாகம், சங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலி, ஆனைக்கோட்டை, மிருசுவில், வல்வெட்டி, வண்ணார் பண்ணை, கோப்பாய் முதலிய இடங்களில் சீடர்களும் சொத்துக்களும் இருந்தன. வேதாரணியத்தில் கார்த்திகை மடம் ஒன்று உண்டு. அக்கார்த்திகை மடத்தில் ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தில் சிவபூஜை, மாகேசுர பூஜை செய்யவும், வேதாரணியம் யாழைப்பழித்த மொழியாள் அம்பாளுக்கும், வேதாரணீஸ்வரருக்கும் தினமும் நெய்யும் திரியும் வழங்கவும், நம்மவர்கள் நிலங்களைத் தர்மசாதனஞ் செய்தார்கள். அந்நிலங்கள் சுன்னாகம், சங்குவேலி, உடுவில், ஆனைக்கோட்டை முதலிய இடங்களில் இருக்கின்றன. விசா (Visa) கட்டுப்பாடு வந்தபின் வேதாரணியக் குருக்கள்மார் இங்கு தங்கி அவர்களின் கடமைகளைப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. நீராவியடிக் குருக்கள்மாருக்கும் இதே கதிதான். வேதாரணியம் கார்த்திகை மடத்துக்குரிய காணிகளை இவர்கள் நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து இரண்டாம் ஆண்டு சிறியேன் நீராவியடிச் சைவப் பெரியார் தில்லையம்பலம் அவர்களையும் அழைத்துக் கொண்டு. அப்பொழுது நீராவியடிக் குருக்கள் மடத்தில் வசித்து வந்த ஸ்ரீ. ந. சோமசுந்தரக் குருக்களையும் அவருடைய தம்பியார் ஸ்ரீ. ந. வைத்தியநாதக் குருக்களையும், யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களின் காணிகளின் நிர்வாகத்தை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையிடம் ஒப்படைக்கும்படி கேட்டோம். தமையனாருக்கு விருப்பமிருந்தது. தம்பியாருக்கு விருப்பமில்லை. தமையனார் வேதாரணியம் சென்று அங்கு சிவபத மடைந்து விட்டார். தம்பியார் (ந. வைத்தியநாதக் குருக்கள்) இங்கு தங்கியிருந்தார். அவருக்குக் கடுமையான சுகவீன முற்றிருக்கும் போது நான் அவரைக் கண்டு, "தில்லையம்பலம் ஐயா இக் காணிகளைச் சைவ பரிபாலன சபைக்கு ஒப்படைக்கும்படி கேட்டார்; நீங்கள் மறுத்து விட்டீர்கள்; இப்பொழுதாவது எழுதிக் கொடுங்கள்" என்று கேட்டேன். அவர் சம்மதம் அளித்தார். ஒரு கட்டுப் பெட்டிக்குள் இருந்த குத்தகை உறுதிகளைத் தந்தார். அவ்வுறுதிகளைப் பிரித்துப் பார்த்து, காணிகள் அட்டவணை ஒன்று தயாரித்தேன். பின் த. முத்துசுவாமி அவர்களைக் கொண்டு ஒப்படை சாதன உறுதியைத் தயாரித்து, மூளாய் வன்னியநாதன் என்னும் சட்டத்தரணியின் உதவியுடன் ஒப்படை சாதன உறுதியை முடித்தோம். பின்பு காணிகளைக் கையேற்பதற்குச் சென்ற பொழுது பல தடைகள் ஏற்பட்டன. பொலீஸில் முறைப்பாடுகளும், கோட்டில் வழக்குத் தொடுத்தலுமாகிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன. இம்முயற்சிகளுக்கு உதவியாயிருந்த வடமாகாண உதவி அரசாங்க அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராய்க் கடமையாற்றிய தி. முருகேசம்பிள்ளை அவர்களதும், அக்காலம் சபையின் நிர்வாக சபையின் அங்கத்தவராயிருந்த இணுவில் இ. திருநாவுக்கரசு பண்டிதர் அவர்களதும் சேவை பாராட்டுதற்குரியது. சாதனங்கள் எழுதவும், வழக்குகள் பேசவும் உதவி வந்த சட்டத்தரணிகள் த. செல்வராசா, சண்முகலிங்கம், அ. சண்முகநாதன் அவர்களதும், மற்றும் நம. சிவப்பிரகாசம், S. நடராசா, உடுவில் கி. தலைவர் முத்துலிங்கம், முகாந்திரம் இ. பொ. இராசையா, வேதாரணியம் ஸ்ரீ சாமி ஐயா குருக்கள். சங்குவேலி சுப்பிரமணியம் பெண் இராசம்மா அவர்களது சேவையும் பாராட்டுதற்குரியது.

**நீராவியடிக் குருக்கள் மடம்:-** இம்மடம், எட்டுப் பரப்பு அளவினையுடையதாய்ப் பருத்திப்புலம் என்னும் பெயரையுடைய காணியில் அமைந்திருந்தது. குருக்கள் இருசாராராக, ஒரு பகுதியினர் ஒரு வருடமும் மற்றப் பகுதியினர் அடுத்த வருடமுமாக நடத்தி வந்தார்கள். விசாக் கட்டுப்பாடு காரணமாக இவ்விரு சாராரும் இங்கிருந்து நடத்த முடியவில்லை; ஐயாச்சாமிக் குருக்கள் தலைமையிலிருந்த பங்காளர், காணியின் மேற்குப் பகுதியிலுள்ள நான்கு பரப்புக் காணியைப் புன்னாலைக் கட்டுவனிலிருந்த ஒரு வியாபாரிக்கு விற்று விட்டார்கள். கிழக்குப் புறமுள்ள நான்கு பரப்புக் காணியை சத்தியக் கடதாசி உறுதி முடித்து முன்னரே குறிப்பிட்டிருந்த ந. சோமசுந்தரக் குருக்களும், ந. வைத்தியநாதக்குருக்களும் ரூபா இரண்டாயிரத்துக்கு வண்ணார்பண்ணை கார்த்திகேசு வைத்திலிங்கம் என்பவருக்கு ஈடு வைத்தார்கள். பின் ஈட்டுக்குப் பணம் கொடுத்தவர் சித்தாரித்தார். அப்பொழுது ந. வைத்தியநாதக்குருக்கள் தான் இங்கு இருந்தார். கடன்காரன் விற்கப்போன சமயத்தில் குருக்கள் மேற்படி காணி நான்கு பரப்பையும், ரூபா மூவாயிரத்துக்கு நீராவியடி வைத்திலிங்கம் கைம்பெண் செல்லம்மாவுக்கு அறுதியாய் விற்றார். அவ்வம்மையார் வடக்குப்புறமாக ஒன்றே கால் பரப்பு நிலத்தை, யாழ் சைவ பரிபாலன சபைக்குக் குருக்கள்மடம் அமைத்துக் குருக்களை இருக்கச் செய்வதற்காகத் தர்மசாதனம் செய்தார். குருக்கள் மடத்தை இடித்த காலத்தில் சபையார் சென்று கிராம விதானையிடம் முறையிட்ட போது, மேற்குப் பக்கமாய் உள்ள காணியை விலைக்குப் பெற்ற வன்னியசிங்கம் என்பவர் ரூபா ஆயிரம் கொடுத்துத் தடையை நீக்கிக் கொண்டார். அந்தப் பணத்தைப் பெற்று அம்மையார், தர்மசாதனம் செய்த துண்டுக்கும் தன் காணிக்குமிடையில் பங்காக ஒரு கிணறு தோண்டினார். கொடுத்த ஒன்றே கால் பரப்பில் பூசை வேதிகையும், சிமெந்தினால் தளமுடையதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடிசையும் சபை அமைத்தது. வேதாரணியத்தைச் சேர்ந்த தியாகராசக் குருக்கள் அவர்கள் அதில் வசித்துக் குருத்துவம் வகித்து வந்தார். சில மாதங்கள் செல்ல அவர் அங்கிருந்து விலகிவிட்டார்; கரணவாய் ஆதீனம் திருஞானசம்பந்தக்குருக்கள் வழமையாய் மக்களுக்கு சமயதீட்சையும், விசேடதீட்சையும் செய்து வருகிறார்கள். சபை ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டு எடுத்த தீர்மானத்தின்படி நீராவியடியில் உள்ள குருக்கள் மடத்தில் அவரையே வந்திருக்கக்கூடிய ஒழுங்குகள் விரைவில் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புராணபடனம்:- கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் மூன்றும் எம்பெருமானின் மூன்று கண்கள் போன்றவை. ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதாம் ஆண்டிலிருந்து சபைக்குரிய இடங்களிலும், நாற்பத்தைந்தாம் ஆண்டு முதல் நாவலர் மண்டபத்திலும், மாறிமாறி வருடத்துக்கொன்றாகத் தக்க சான்றோர்களால், இம்மூன்று புராணங்களும் படனம் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றோடு கூடச் சேக்கிழார் புராணம், வாதவூரர் புராணம், நாவலர் புராணம் என்பவையும் வருடந்தோறும் அவற்றுக்குரிய காலங்களில் படனம் செய்யப்பட்டு வருகின்றன. வேதபாராயண ஒலியே போன்று, புராணபடன ஓசையால் வளர்ச்சியும், செழிப்பும் பெற்ற ஆலயங்களையும், மடாலயங்களையும் மக்கள் அறிவர். இப்புராண படனம் தொடர்ந்தும் இந் நாவலர் மண்டபத்தைத் தன் பொருள் நிறைந்த இன்னோசையினால் நிரப்ப வேண்டுமென்பது என் பெருவிருப்பங்களில் மிக உயர்ந்ததொன்றாகும்.

## திருக்கேதீஸ்வரப் பணி

திருக்கேதீஸ்வர திருப்பணித் தொண்டு ஆரம்பிக்கமுன், அவ்வாலயம் நாட்டுக்கோட்டை செட்டிமார் சபையினால் *நிர்வகிக்கப்பட்டு வந்தது. அராலியைச் சேர்ந்த சிவஸ்ரீ இந்திரக் குருக்களும் அவருடைய உறவினர்களும் கோவில் பூசையை நடத்தி வந்தார்கள்; மக்கள் வழிபாட்டுக்குச் செல்லும் பாண்ந் காடு செறிந்த இடமாக இருந்தது; அங்கு வழிபாட்டுக்குச் செல்வோர் தொகையும் மிகக்குறைவு. மேற்பார்வையாளராக இருந்த கணக்கப்பிள்ளை சைவ ஆசாரத்தைக் கவனியாது, கோயில் பரிபாலனத்தை நடத்தி வருகின்றாரென்பதைச் சைவப் பெரியார் திரு: சு: சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு ஒரு அன்பர் முறையிட்டார். பெரியாரது விருப்பப்படி நானும் அதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் சைவ பரிபாலன சபைக் காரியதரிசியாக இருந்த பரிஸ்டர் க. சண்முகமும் அங்கு சென்று அக்குறையை நீக்கினேம். திருக்கேதீஸ்வரத்துக்கு அருகாமையிலிருந்த சைவ வித்தியாசாலையில் சைவப்பிரசாரக் கூட்டங்களையும் பின்னர் நடத்தினேம். திருக்கேதீஸ்வரப் புனருத்தாரண சபை நிறுவப்பட்டபின் நிதி சேர்க்க உதவி செய்தோம்,

இச்சபையின் தலைவராயிருந்து, ஸ்தலத்தின் அறப்பணிகளைச் சிறப்புற நிர்வகித்துப் பல ஆக்கபூர்வமான வேலைகளை அங்கு செய்துவந்த சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் விருப்பப்படி, அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் அவர்களின் புத்திரர் வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களாற் பாடப்பட்ட திருக்கேதீஸ்வர புராணம். அதனை, வேலணை திருஞானசம்பந்த மடாலய பரிபாலன சபையார் அச்சிட்டு, ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில், கொக்குவில் குமாரசாமிப் புலவர், சங்கீதபூஷணம் விஞசித்தம்பி, புத்தூர் புலவர் சுப்பிரமணியம் ஆகியோருடன் அடியேனும் சேர்ந்து, திருக்கேதீஸ்வரத்தில் எம்பெருமான் முன்பாக அரங்கேற்றினேம்;

## மடாலயங்களின் மகிமை

மாதவர் மடங்க ளாதி வரதன்மந் திரங்களாதி
நாதமா மிலிங்க மாதி நளினபுட் கரிணியாதி
சேதமுற் றிடின் முன்போலச் செய்கிற்றோர்க் குறும் பயன்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மி லாயிரங் குணித மோங்கும்.

எங்கெங்கு சைவசமயிகளின் ஆலயங்கள் அமைந்தனவோ, அங்கெல்லாம் அவற்றிற்கு அங்கமாக மடாலயங்களும் வித்தியாலயங்களும் அமைக்கப் பெற்றன. மடாலயங்களில் சிவனடியார்கள் தங்கி சிவபூசை அனுட்டானங்கள் நடாத்தி மாகேசுர பூசை, குருபூசைகளையும் மேற்கொள்ளுவார்கள். யாத்திரிகர் தங்கி தங்கள் பூசை நியமங்களை முடித்துக் கடவுள் வழிபாடு செய்து, ஆசாரமான உணவு அருந்தவும் மடங்கள் அமைக்கப்பட்டன. கதிர்காமத் தலத்தில் பண்டைக்காலம் தொடக்கம் பல மடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நகரத்தார் மடம், சடையம்மா மடம், மார்க்கண்டு மடம், திருவிளங்கநகரத்தார் மடம் இன்னும் இவைபோன்ற பல. கதிர்காம யாத்திரைக்குச் செல்லும் சைவமக்கள் மாணிக்க கங்கையில் தீர்த்தமாடி, சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுட்டானங்களையும், பூசை நியமங்களையும் முடித்துக்கொண்டு, கதிர்காம முருகனையும் வழிபட்டு, மடங்களுக்கு வந்து அடியார் கூட்டத்துடன் திருவமுது அருந்துவார்கள். துரதிஷ்டவசமாகக் கதிர்காமத்தல மடங்கள் அகற்றப்பட்டபின், அடியார்கள் சைவ ஆசாரப்படி மாகேசுரபூசை நடாத்த இயலாதிருக்கிறது. சடையம்மா மடம் மிகவும் பிரசித்தி பெற்றது. அதில் ஐம்பத்திரண்டு அறைகள் இருந்தன; அந்த அறைகளில் பிராமணர்கள், சைவக்குருக்கள்மார், சைவமக்கள் அவரவர்கட்குரிய முறைப்படி பூசை வழிபாடுகள் செய்து முருகனை வழிபட்டு, நற்கதி பெறுவதற்கு உதவியாயிருந்தது. இம்மடத்தில் கந்தபுராணப்படனம், ஒவ்வொரு வருடமும் திருவிழாக் காலத்தில் தவறாது நிகழ்ந்தது. யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவரும், கீரிமலையில் சமாதியாகியுள்ள வருமாகிய, சிவஞானியாகிய சடையம்மா என்னும் புண்ணியவதியினால் இம்மடம் ஸ்தாபிக்கப்பட்டது. இதைக் கட்டுவதற்குரிய மரம், சீமெந்து, தளபாடங்கள் இச மகாராமையிலிருந்து பொது மக்களால் தோளில் சுமந்து கொண்டு சென்று கட்டப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பலர் அங்கு அன்னதானமும் செய்தார்கள்.

தற்போது கதிர்காமம் செல்லும் சைவசமய யாத்திரிகர்கள் சுத்தமான உணவு அருந்த இயலாது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சேர். பொன். அருணாசலம் அவர்கள் கதிர்காமத்தைப் பற்றி ஒரு ஆங்கிலநூல் எழுதியுள்ளார். அதனை இணுவில் பண்டிதர் அ. க. இளையதம்பி அவர்கள் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். அந்த நூலை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை அச்சிட்டு வெளியிட்டது. இப்பொழுது அந்தப் பிரதிகளை அவரது தமையனாரின் மகன் கதிர்காமநாதனிடம் பெற்றுக் கொள்ளலாம். சைவமக்கள் தங்கி வழிபாடு செய்து தூய உணவு அருந்தத்தக்க மடாலயங்கள் கதிர்காமத்தில் அத்தியாவசியம் அமைத்தல் வேண்டும். கதிர்காமசுவாமிக்கு அருச்சனை செய்வதற்கு, சைவமுறைப்படி வாழைப்பழம் வெற்றிலை பாக்கு நிவேதனம் செய்யும் ஒழுங்கு வேண்டும். கடதாசிப்பூ, அன்னாசிப்பழத்துண்டு முதலியவை சுவாமி நிவேதனத்துக்கு உரியன அல்ல.

யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் பலாலிவீதி அரசடி வீதி சந்திக்கு அருகாமையில் கிழக்குப்புறத்தில் கந்தபுராண மடம் அமைந்திருந்தது; அங்கு கந்தபுராணம் ஒழுங்காகப் படித்துப் பயன் சொல்லப்பட்டு வந்தது; இம்மடத்தினால் தான் இது அமைந்த ஊருக்கு "கந்தர்மடம்" என்னும் பெயர் வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. தற்போது அங்கு புராணபடனம் நடைபெறுவதில்லை. ஒருவர் அங்கு வந்து குடியேறியபின், பூசை புராணப்படிப்பு முதலிய தரும காரியங்கள் தடைப்பட்டு விட்டன. யாழ்ப்பாணத்திலிருந்த பெரியகடை கெங்காசத்திரம், வண்ணை சிவன் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள கதிரேசன் கோவிலுக்கு முன்னால் இருந்த கண்மணியம்மாள் சத்திரம், நாவலர் வீதியில் றெயில் பாதைக்கு அண்மையிலிருக்கும் அன்ன சத்திரம், சிதம்பரக் கல்லூரியில் அமைந்த ஓட்டுமடம் (ஓட்டுமடம் சந்திக்கு மேற்குப் பக்கமடம்) போன்ற இன்னும் பல இடங்களிலமைந்த மடாலயங்கள் யாவும், எந்தத் தருமங்களைப் பரப்பவும் நிலை நிறுத்தவும் ஏற்பட்டனவோ, அவற்றைப் பேணிப் பாதுகாத்து அவை ஏற்பட்ட நோக்கம் நிறைவேற சைவமக்களும், ஸ்தாபனங்களும் மிகுந்த ஊக்கம் காட்ட வேண்டும்.

## உயிரினங்களை ஆலயங்களுக்குத் தானமாய்க் கொடுத்தலைத் தடுத்தல்

வேலணைத் தீவிலுள்ள புளியங்கூடல் மகாமாரி அம்பாள் கோவிலுக்கு தேர்த் திருவிழாவன்று மக்கள் ஆடு, கோழி, பசு முதலியவற்றைத் தானமாக வழங்குவார்கள். அவற்றை கோவில் முகாமையாளர் தேர்த்திருவிழா முடிய ஊன் உண்பவர்களுக்கும், கசாப்புக் கடைக்காரர்களுக்கும் விற்பனை செய்வார். அவ்விதம் ஈட்டும் பொருளை அவர் கோவில் நிர்வாகத்திற்கு உபயோகிப்பார். இக்கோவிலைப் பின்பற்றி வேலணை கிழக்கிலுள்ள முத்துமாரி அம்பாள் கோவிலிலும், நாரந்தனை வடக்கு மனோன்மணி அம்பாள் கோவிலிலும் தேர்த்திருவிழாவன்று ஆடு, கோழி, பசு முதலியவற்றை மக்கள் தானமாக வழங்குவார்கள்; அவர்களும் அவற்றை ஊன் உண்பவர்களுக்கும், கசாப்புக் கடைக்காரர்களுக்கும் விற்பார்கள். கொல்லாமையும், புலால் உண்ணாமையும் விரதமாகக் கொள்ளும் சைவ சமயத்திற்கு இது ஒரு பெரும் இழுக்காகும். இத்தீய செயலை நீக்குவதற்கு நாங்கள் பசு பாதுகாப்புச்சபை ஒன்றை நிறுவி கட்டுரைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு மக்களுக்கு வழங்கினோம். பிரசாரக் கூட்டங்களையும் நடத்தினோம். சென்ற ஆனி மாதத்தில் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒரு பகிரங்கக் கூட்டத்தை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இளைப்பாறிய பிரதம ஆசிரியர் இ. சபாலிங்கம் அவர்களின் தலைமையில் நடத்தினோம். அக்கூட்டத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா அவர்களும், திரு. ம. நமசிவாயம் அவர்களும், வேலணை மத்திய கல்லூரி உபஅதிபர் பொ. கேதாரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும், சிவஸ்ரீ வை. இராமகிருஷ்ண ஐயர் அவர்களும், சித்தாந்த பண்டிதர் து. ஏரம்பு அவர்களும், பிறரும் உரையாற்றினார்கள். கோவில் முகாமையாளர்களைக் கண்டு உரையாடி, இக்கொடிய செயலை நிறுத்த வேண்டுமென்றும், அதற்கு உதவியாகக் கடமையாற்ற ஒரு உபசபையும் நிறுவப்பட்டது. அந்த உபசபை உறுப்பினர் பின்வருவோராவர்:

1. திரு. இ. சபாலிங்கம் அவர்கள்
2. திரு. நா. முத்தையா அவர்கள்
3. திரு. பொ. கேதாரநாதன் அவர்கள்
4. திரு. து. ஏரம்பு அவர்கள்
5. திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

இந்த உபசபை அவ்வப்போது தேர்த்திருவிழாவுக்கு முன் முகாமையாளர்களைக் கண்டு, அவர்கள் செயல் சைவசமயத்துக்குப் பெரும் பாதகமானது என்று விளக்கினார்கள்; அவர்கள் எங்களுடைய வேண்டுகோளுக்கு ஒத்துழைப்பதாகப் பதில் உரைத்தார்கள். இவ்வருடம் புளியங்கூடல் மகாமாரி அம்பாள் கோவில் தேர்த்திருவிழாவன்று பசு இனங்கள் தானமாக வழங்கப்படவில்லை; மற்றைய உயிரினங்கள் வழமையைவிடக் குறைவாகவே வழங்கப்பட்டனவென்றும் அறிகிறோம். காலகெதியில் உயிரினங்கள் தானமாக வழங்கும் செயல் அற்றுவிடுமென எண்ணுகிறோம்.

வாழ்க சைவம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம், தொலைபேசி: 8175.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org